புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==============================================================================

# ஆழ்வார் பாசுரங்களில் பாரத நிகழ்வுகள்

வெ.பைரவன்
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 117.

==============================================================================

ஆய்வுச்சுருக்கம்

வைணவ சமயத்தின் முதன்மை தெய்வமாகிய திருமாலைப் போற்றித் தமிழ்ச் செய்யுள்களால் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகும். இது காத்தல் கடவுளாகிய திருமாலின் ஏற்றமுரைப்பது திருமாலின் பல அவதாரங்களையும் ஏத்திப் புகழ்வது. கிருஷ்ண அவதாரத்தின் மூலம் பாரதப் போரில் ஈடுபட்ட கண்ணனது எளிமை குணம் ஆழ்வார்களைப் பெரிதும் கவர்ந்தன. இதனால் கண்ணனின் பெருமையைப் பாடிய ஆழ்வார்கள் பாரதத்தில் கண்ணன் தூது சென்றதும், அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக அமைந்ததும் மற்றும் பல்வேறு நிகழ்வுகளையும் கூறிச் சென்றுள்ளனர். அவ்வகையில் ஆழ்வார்கள் தம் பாசுரங்களின்வழி பாரதச் செய்திகளைப் புராண இதிகாசத்தின்படி எங்கெங்கு கூறிச் சென்றுள்ளனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

## முன்னுரை

ஆழ்வார்தம் காலங்களில் பாரதக்கதை புதிய வீறுபெற்று விளங்கியது. பாரதப் பாத்திரங்களில் ஒருவனான கண்ணன் இப்பாசுரங்களில் அவதாரமாகத் தலைமைபெற்றான். அதுமுதல் பாரதம் கண்ணனின் பெருமையைப் பாடும் காப்பியமானது. வில்லிபாரதத்தில் ‘மன்னு மாதவன் சரிதம்’ இடையிடையே வருகின்ற பற்றினால் பாரதம் பாடியதாக வில்லிபுத்தூராரே குறிப்பிடுவார். இப்பற்றானது ஆழ்வார் பாசுரங்களின் தாக்கத்தினால் விளைந்த விளைவாகும். அதனால்தான் வில்லிபாரதத்தில் பருவந்தோறும், சருக்கந்தோறும் கண்ணன் வணக்கம் சொல்லப்படுகின்றது.

## கண்ணன் பிறப்பு

தேவகி பிராட்டிக்கு மகனாகப் பிறந்த அதே இரவினில் ஆயர்பாடியில் உள்ள நந்தகோபனின் திருமாளிகைக்கு வந்தடைந்து யசோதை அன்னைக்கு மகனாகப் பிறந்தான் கண்ணன். பின்பு கண்ணன் ஒளிர்ந்து வளர்ந்ததை அறிந்த கம்சன் எவ்வாறேனும் கண்ணனைக் கொன்றுவிட வேண்டும் என்று பலவித தீங்குகள் செய்த போதிலும் அவனது சூழ்ச்சிகளை முறியடித்து இறுதியில் கண்ணன் அவனைக் கொன்றான். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் கண்ணின் பிறப்பை ஆண்டாள் தம் பாசுரத்தில்,

“ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளர
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக்கஞ்சன் வயிற்றில்” [1]

என்று குறிப்பிட்டுள்ளார். இதனையே வில்லிபுத்தூரார் தம் பாரதத்தில் கண்ணன் பிறந்த அன்று பெற்றோரிடமிருந்து அப்புறப்படுத்தப்பட்டமையை,

“சொற்றவா நன்று சுகன்திருத் தாதை
சூதிகை தோன்றிய பொழுதே
பெற்றதாய் தானும் பிதாவும்முன் வணங்கப்

*பேசலா வுரையெலாம் பேசி*
*கற்றமா யையினால் கன்னிஅங்கு இருப்பக்*
*காரிருள் காளிந்தி நீந்தி*
*அற்றைநாள் அண்ட ராவனவர்க்கு எல்லாம்*
*அரசனுக்கு ஆருமகன் ஆனான்'' [2]*

*என்று குறிப்பிட்டுள்ளார்.*

*கிருஷ்ணன் தூது*

*ஒருவர் தன்கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்கும் பொருட்டு தன் சார்பாக ஒரு நபரையோ அல்லது வேறோரு பொருளையோ தூதாக அனுப்புவது தூதாகும். இது தூது செல்வோர் பெயரிலோ அல்லது தூது விடுப்போர் பெயரிலோ அமையப்பெறும். பாரதப்போர் நடக்கும் முன்பு கண்ணன் பாண்டவர்க்காக கௌரவர்களிடம் தூது செல்வதையே கிருஷ்ணன் தூது என்கின்றோம்.*

*கௌரவர்களுடன் போரைத் தவிர்க்க விரும்பிய பாண்டவர்கள் தாங்கள் வாழ்வதற்குக் குறைந்தது ஐந்து கிராமங்களையாவது கேட்டுப்பெற கண்ணனை அஸ்தினாபுரத்திற்குத் தூது அனுப்பினர். இத்தூதுச் செய்தியினை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள்,*

*''வன்துணை பஞ்ச பாண்டவர்க் காகி*
*வாயுரை தூதுசென் றியங்கும்*
*என்துணை எந்தை தந்தைதம் மானைத்*
*திருவல்லிக் கேணிக்கண் டேனே'' [3]*

*''மன்னர் பெருஞ்சவையுள் வாழ்வேந்தர் தூதனாய்*
*தன்னை யிகழ்ந்துரைப்பத் தான்முனநாள் சென்றதுவும்'' [4]*

*என்று திருமங்கை ஆழ்வாரும்,*

*''நாடுடை மன்னர்க்குத் தூதுசெல் நம்பிக்கு என்*
*பாடுடை அல்குல் இழந்தது பண்பே'' [5]*

*என்று நம்மாழ்வாரும்,*

*''பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து'' [6]*

*என்று பெரியாழ்வாரும் கண்ணன் தூதினைத் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார்.*
*வில்லிபாரத உத்தியோகப் பருவ கிருஷ்ணன் தூது சருக்கத்தில் தூது புறப்பட்ட கண்ணனின் காலடிகளில் விழுந்து கதறுகின்றாள் திரௌபதி. அப்பொழுது கண்ணன் அவளிடம்,*

*''தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பின்*
*நல்லாயுன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன்*
*எல்லாரும் காணஇனி விரிப்பது எண்ணரிய*
*புல்லார்தம் அந்தப்புர மாதர் பூங்குழலே'' [7]*

*என்று கண்ணன் கூறுவதாக வில்லி குறிப்பிடுகின்றார். இக்கருத்தின் செய்தியினைத் திருமங்கை ஆழ்வார் முன்னமே தம் பாசுரத்தில்,*

*''சந்தமல் குழலாள் அலக்கண்நூற் றுவர்தம்*
*பெண்டிரு மெய்திநூ லிழப்ப*
*இந்திரன் சிறுவன் தேர்முன்நின் றானைத்*
*திருவல்லிக் கேணிக்கண் டேனே'' [8]*

*என்று பாடுகின்றார். இதன் பொருளானது பிறவிக் குருடனான திருதராஷ்டிரனின் மகனும், அரசர்களுக்கெல்லாம் அரசன் என்று தன்னைக் கருதிக் கொண்டிருப்பவனுமான துரியோதனுடைய தம்பியான துச்சாதனன் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து கொண்டிருக்கும் திரௌபதியிடம் நெருங்கிச் சென்று உன் கணவன்மார்களெல்லாம் உன்னைப் பணயமாக வைத்து எங்களிடம் தோற்றுப் போய்விட்டார்கள். எனவே இப்போதுமுதல் நீ எங்களுக்கு அடிமையாவாய். எனவே நாங்கள் இடும் கட்டளையெல்லாம் செய்யக் கடமைப்பட்டவளாய் என்று சிறிதும் வெட்கப்படாமல் கூற, அதனைப் பொறுக்க மாட்டாத திரௌபதி கண்ணனை நோக்கி, கோவிந்தா! என்னைக் காப்பாற்றியருள வேண்டும் என்று கதறி*

நிற்க திரௌபதியடைந்த துயரத்தைத் தீர்க்கக் கருதிய கண்ணன் அதை விடவும் மேற்பட்ட துன்பத்தை அந்தத் துரியோதனன் முதலிய கௌரவர் நூற்றுவரின் மனைவியரும் அடைய வேண்டும் என்று கருதி நூற்றுவரையும் கொன்றழிக்கத் தீர்மானித்தான். அதனால்தான் பாண்டவர்களின் முதன்மையானவனும், இந்திரனின் மகனுமான அர்ச்சுனனின் தேரைத் தானே சாரதியாய் முன் நின்று செலுத்தி அவர்களைக் கொன்றழித்தான். கண்ணன் தூதனாகிய எளிமை ஆழ்வார்கள் அனைவரையும் ஆட்கொண்ட போதிலும் திருமங்கையாழ்வார் இச்செய்தியினை,

“முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாள முனிந்து அவனே
பின்னோர் தூத னாதிமன்னர்க் காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூத னெனநின்றா னேவ்வுள் கிடந்தானே” [9]

என்று வெளிப்படுத்துகிறார். அவ்வாறே வில்லிபாரதத்தில் கண்ணன் தூதனாகி வந்த செய்தியைத் துரியோதனனுக்கு,

“அன்று தூதுகொண்டு இலங்கைதீ விளைத்தவர் ஐவர்க்கு
இன்று தூதுவந்து எயிற்புறத்து இறுத்தனர் என்னாத்
துன்று தூதுவண் டினம்முரல் தொடையலான் தனக்குச்
சென்று தூதுவர் இயம்பினர் சேவடி வணங்கி” [10]

என்று தெரிவிக்கப்பட்டதாக வில்லிபுத்தூரார் குறிப்பிடுகிறார். இவ்வாறு பாரதக் கதை நிகழ்வுகளைக் கூறும் பொழுது வில்லிபுத்தூரார் சொற்பொருளால் ஆழ்வார்களையே ஒட்டிச் சென்றமையைக் காணமுடிகின்றது.

தேர்ப் பாகனாக கண்ணன்

பாரதப் போரில் பாண்டவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்குபவன் கண்ணன். இவன் பாரதப்போரில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் இடையே தூதனாகச் சென்றவன். போரில் அர்ச்சுனனின் அழகிய தேருக்குச் சாரதியாயிருந்து, அர்ச்சுனனை எதிர்த்துவரும் சேனையினைப் போர்க்களத்தில் வலிமை அழிந்து ஓடும்படி வெற்றிபெற உறுதுணையாக இருந்தவன். இந்தக் கண்ணன் தேர்ப்பாகனாக இருந்த செய்தியினை,

“திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி” [11]

என்று பூதத்தாழ்வாரும்,

“பாரேறு பெரும்பாரந் தீரப் பண்டு
பாரதத் தூதியங்கி பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியா யெதிர்ந்தார் சேனை
செருக்களத்துத் திறலழியச் செற்றான் றன்னை” [12]

என்று திருமங்கை ஆழ்வாரும்,

“போர்ப்பாகு தான்செய்தன் றைவரை வெல்வித்த மாயப்போர்த்
தேர்ப்பாக னார்க்கிவள் சிந்தை துழாய்த்திசைக் கின்றதே” [13]

என்று நம்மாழ்வாரும்,

“தேரொடுக்க வூர்ந்தாய் செழுந்தார் விசயரற்காய்” [14]

என்று பெரியாழ்வாரும் கண்ணன் தேர்ப்பாகனாகப் பணி செய்தமையைக் குறிப்பிடுகின்றனர். இவ்விரு பெருநிகழ்வுகள் மட்டுமின்றி பாரதத்தில் வரும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ள அவற்றைப் பற்றி இனி காண்போம்.

பிற பாரத நிகழ்வுகள்

பாரதப்போரில் பதின்மூன்றாம் நாளில் அர்ச்சுனனது புதல்வனான அபிமன்யுவை சிந்து நாட்டு மன்னனும் துரியோதனனின் தங்கை துச்சளையின் கணவனுமான சயந்திரதன் கொன்றுவிட, அங்ஙனம் தன் மகனைக்கொன்ற சயந்திரதனை மறுநாள் சூரிய அஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடில் தீயில்புகுந்து உயிர் துறப்பதாக அர்ச்சுனன் சபதம் மேற்கொண்டான். அதன்படி மறுநாள் பகல் முழுவதும் சயந்திரதனை வெளிப்படுத்தாமல் சேனையின் நடுவே நிலவறையில் மறைத்து வைத்திருந்தான் துரியோதனன். இவ்வாறு சயந்திரதன் வெளியே வராமல் இருந்தால் அர்ச்சுனனின் சபதம் நிறைவேறாமல் போய்விடுமே என்றெண்ணிய கண்ணன் தன்னுடைய திருவாழியினால் சூரியனை மறைக்க அப்பொழுது எங்கும் இருள் பரவியததால் அர்ச்சுனன் தன் சபதத்தின்படி தீப்புகச் சென்றான். இந்நிகழ்வினை களிப்போடு

*காண்பதற்கு துரியோதனனோடு சயந்திரதனும் வந்து எதிர்நிற்க, அப்பொழுது கண்ணன் தன்னுடைய திருவாழியை வாங்கிவிடவே பகலாயிருந்ததனால் உடனே அர்ச்சுனன் சயந்திரதன் தலையைத் துண்டித்தான். இந்நிகழ்வினையே,*

*"மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்*
*தியங்கும் எறிகதிரோன் றன்னை – முயங்கமருள்*
*தேராழி யால் மறைத்த தென்நீ திருமாலே*
*போரழிக் கையால் பொருது"* [15]

*என்று பொய்கையாழ்வார் தம் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.*

*பாரதத்தில் காண்டவனம் என்பது ஒரு பெருங்காடு. அக்காட்டிற்கு உரிமை உடையவன் தேவர்களுக்கு அரசரான தேவேந்திரன். கண்ணன் அவன் கண் முன்னே சீற்றம் கொண்டு அக்காடு முழுவதும் நெருப்பை உண்டாக்கி அதில் நிறைந்திருந்த கொடிய மிருகங்களையும், அசுரர்களையும் அழிந்து போகும் வண்ணம் அக்னிக்கு இரையாகச் செய்தவன். இதனையே திருமங்கையாழ்வார்,*

*"காண்டாவன மென்பதோர் காடமர்க்*
*கரையனது கண்டவன்நிற்க முனே"* [16]

*என்று தம் பாசுரத்தில் கூறியுள்ளார்.*

*கண்ணன் தனது மைத்துனர்களாகிய பாண்டவர்களின் மனைவியாகிய பாஞ்சாலி என்னும் திரௌபதியின் விரித்த கூந்தலைச் சபதம் கைகூடியதும் முடியச்செய்தவன். பாரதப்போர் முடிந்தபின்பு தன் மைத்துனர்களாகிய பாண்டவர்களையே ராஜ்ய பரிபாலனம் செய்யுமாறு அரசர்களாக்கியவன். அபிமன்யுவின் மனைவியான உத்திரையின் மகனான பரீசித்து என்பவன் பிறக்கும்போதே கரிக்கட்டையாய் விழுந்தவனைத் தன் திருவடி ஸ்பரிசத்தால் மீண்டும் உயிர் பெறச் செய்தான் என்னும் பாரத நிகழ்வுகளை,*

*"மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்*
*தவர்களையே மன்ன ராக்கி*
*உத்தரைதன் சிறுவனையு முயக்கொண்ட*
*உயிரான னுறையும் கோவில்"* [17]

*என்று பெரியாழ்வார் தம் பாசுரத்தின்வழி மூன்று பாரத நிகழ்வுகளையும் ஒரே பாசுரத்தில் கூறியுள்ளார். திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில் கம்ச வதத்தினை,*

*"மல்லரை யட்டு மாளக் கஞ்சனை மலைத்துக் கொன்று*
*பல்லர சவித்து வீழப் பாரதப் போர்மு டித்தாய்"* [18]

*என்று கூறியுள்ளார். பகவான் விஷ்ணுவின் ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஒரு நோக்கம் இருந்தது. அந்த விதத்தில் கிருஷ்ண அவதாரமும் சில நோக்கங்களைக் கொண்டது. அந்த நோக்கத்தில் ஒன்று தன் மாமனான கம்சன் என்னும் அரக்கனைக் கொள்வது. உறவாக இருந்தாலும் தவறு செய்தால் தண்டனை நிச்சயம் என்பது இந்த வதத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும்.*

*முடிவுரை*

*ஆழ்வார் பாசுரங்களில் கண்ணனின் பிறப்பு, பாண்டவர்களுக்காகத் தூது சென்றது, அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாகப் பணி செய்தது, கம்சனை அழித்து, தன் ஆழியால் சூரியனை மறைத்தது போன்ற பல்வேறு நிகழ்வுகளைக் காண முடிந்தது. மேலும் வில்லியின் பாரதத்தை ஆழ்ந்து காணுங்கள் கண்ணனைப் பற்றி வில்லி கூறும் கருத்துக்கள் பல தம் பொருளால் மட்டுமேயின்றி சொல்லாலும் கூட ஆழ்வார் பாசுரங்களை ஒத்திருப்பதை இங்கு காண முடிகின்றது.*

*அடிக்குறிப்பு*

1. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 498*
2. *வில்லிபாரதம் பாகம் - 2 பா. 117*
3. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1072*
4. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 2674*

5. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 3285*
6. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 99*
7. *வில்லிபாரதம் பாகம் - 3 பா. 109*
8. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1073*
9. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1060*
10. *வில்லிபாரதம் பாகம் - 3 பா. 130*
11. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 2196*
12. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1145*
13. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 3062*
14. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 102*
15. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 2089*
16. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1079*
17. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 417*
18. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா. 1303*

*துணைநூற்பட்டியல்*


1. *எம். நாராயண வேலுப்பிள்ளை, வில்லிபாரதம் மூலமும் தெளிவுரையும், 2013, பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை, சென்னை – 600 108.*
2. *பிரேமா பிரசுரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2010, 59 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********